10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 236 திங்கட்கிழமை ஜனவரி 15 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## விதி மீறல் 167 பேர் கைது

கொழும்பு,ஜன.15

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் இதுவரையில் 18 வேட்பாளர்கள் உட்பட 167 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

"இந்த 167 பேரும் கடந்த 09ஆம் திகதியிலிருந்து நேற்றுக் காலை 6 மணி வரையான காலப்பகுதியிலேயே கைது

06▶

## புலிகளின் பாடல்கள் ஒலிப்பதைத் தடுக்குக! 'கபே' கோரிக்கை



கொழும்பு, ஜன.15

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகளுக்கு, விடுதலைப் புலிகளின் காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழீழ எழுச்சிப் பாடல்களைப் பயன்படுத்தப்படுவது குறித்து, தேர்தல்கள் ஆணைக்குழுவிடம், தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே முறைப்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து தகவல் வெளியிட்ட கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்,

"இந்தப் பாடல்களைத் தேர்தல் பரப்புரைகளுக்குப் பயன்படுத்துவது தேர்தல் விதிமீறலாகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது பணியகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல்வாதியான அங்கஜன் இராமநாதன் புலிகளின் பாடல்களை ஒலிக்கவிட்டிருந்தார்.

அங்கு ஜனாதிபதியின் படம் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அதே வேளை, புலிகளின்

06▶

## நாடு கடந்த தமிழீழ அரசின் உறுப்பினர் நாடு கடத்தல்



கொழும்பு, ஜன.15

நாடுகடந்த தமிழீழ அரசின் மூத்த உறுப்பினர் சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் நாடு கடத்தப்பட்டனர்.

கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றிருந்ததால் இலங்கைக்குள் நுழைய அனுமதிக்கப்படாமல் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுரேஸ்நாத் இரத்தினபாலனும்

06▶

## சூரியன் வேட்பாளர் மீது கூட்டமைப்பினர் தாக்கு

மன்னார்,ஜன.15

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச சபை பிரிவில் உள்ளூராட்சி சபை தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரின் வீட்டின்மீது மாற்றுக் கட்சியைச் சார்ந்த குழு ஒன்று தாக்கியதாக் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில், மன்னார் மாந்தை பிரதேச சபைக்குட்பட்ட ஆட்காட்டிவெளி 6 ஆம் வட்டாரத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில்

06▶

## புலிப் புத்தகத்துடன் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஜன.15

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நான்கு துப்பாக்கிகள், கைக்குண்டுகள் உட்பட பயங்கரமான ஆயுதங்களை காலி கரந்தெனிய மடக்கும்புர பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து தாம் கைப்பற்றியதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பல்வேறு துப்பாக்கிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்ட விடுதலைப் புலிகளின் சின்னத்துடன் கூடிய புத்தகம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான்

06▶



# மைத்திரி அதிரடி

## மதுபானம் தொடர்பான திருத்தங்கள் உடன் ரத்து

கொழும்பு, ஜன.15

மதுபானசாலைகள் மற்றும் மதுபான விற்பனை தொடர்பில் நிதியமைச்சு அண்மையில் வெளியிட்ட திருத்தங்களை இன்று திங்கட்கிழமை நடைமுறைக்கு வருமாறு நீக்கம் செய்யும் வகையில் அதிரடி உத்தரவை

06▶

## பொம்மலாட்டம் முதலிடம்



வடமராட்சி, ஜன.15

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வல்வை விக்னேஸ்வரா சன சமூக சேவா நிலையம் நடத்திய மாபெரும் விசித்திர பட்டப்போட்டியும் கல்வியில் சாதனை படைத்த சாதனையாளர் கௌரவிப்பும் உதயசூரியன் கடற்கரையில் நேற்று மாலை இடம்பெற்றது.

06▶

## வவுனியாவில் கார் விபத்து: இருவர் உயிரிழப்பு

### இருவரைக் காணோம் பொலிஸ் சந்தேகம்

வவுனியா,ஜன.15

வவுனியா புகையிரத நிலைய வீதியில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற கோர விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். விபத்துக்குள்ளான காரில் இருந்த இருவர் தலைமறைவாகியுள்ளதால் இந்த விபத்தில் பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா நகரில் இருந்து புகையிரத நிலைய வீதி ஊடாக குருமன்காடு நோக்கி ஐந்து பேர் பயணித்த கார் ஒன்றே, நேற்று முன்தினம் நள்ளிரவு, வீதியோரத்தில் குவிக்கப்பட்டு இருந்த கற்களுடன் மோதி விபத்துக்குள்ளாகித் தடம் புரண்டுள்ளது.

இதன்போது ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானர். மேலும், இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டனர். அவ்வாறு காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஒருவர் நேற்று அதிகாலை மரணமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்தவர்களை தவிர ஏனைய இருவரையும் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது பொலிஸாருக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)





உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# தலைவர் பிரபாகரனுக்காகவே கூட்டமைப்பை மக்கள் ஆதரித்தனர்

## அங்கஜன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.15

“தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சொன்னார் என்ற ஒரே காரணத்துக்காகவே தமிழ் மக்கள் பத்துப் பதினொரு வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வந்தனர். ஆனால் மக்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அவர்கள் இதுவரை நிறைவேற்றவில்லை. அதனாலேயே அரசியலில் நான் அடியெடுத்து வைத்தேன்” என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.


சாவகச்சேரியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“உள்ளூராட்சித் தேர்தல் என்பது உரிமை, தேசியம் என்பவற்றைப் பேசுவதற்கான தேர்தல் அல்ல. இது கிராம மட்டத்தில் உள்ள மக்களின் பிரச்சினைகள், குடிதண்ணீர், வீதி அமைப்பு, சிறு வேலை வாய்ப்புகள் பற்றி பேசும் தேர்தல். ஆகவே இந்த உள்ளூராட்சித் தேர்தலில் சின்னங்களைப் பார்க்காது சமூகத்துக்குச் சேவையாற்றக் கூடிய நல்ல மனிதர்களைத் தான் பார்க்க வேண்டும்.

தலைவர் பிரபாகரன் இருக்கும் போது ஒன்றாக இருந்த கூட்டமைப்பினர் இன்று பிரிந்து மூன்று கட்சிகளாகப் போட்டியிடுகின்றனர். தற்போது தென் பகுதியை விட வடபகுதி சகல விடயங்களிலும் பின்தங்கி உள்ளது. ஆனால் போதைப் பாவனை மதுசார விற்பனையில் முன்னிலை வகிக்கின்றது. இந்த நிலை தொடருமானால் இன்னும் 5வருடங்களில் வடக்குக்கும் தெற்குக்கும் பெரும் இடைவெளி வந்துவிடும். எமது பிள்ளைகள் இன்று கல்வித் தரத்தைக் குறைத்து சாதாரண தரத்துடன் தொழில் செய்யத் தொடங்குகின்றனர். வருங்காலங்களில் 5 ஆம் தரத்துடன் தொழிலுக்கு இறங்கக் கூடிய வறுமை நிலை எமது மக்களை வாட்டுகிறது. இவை அனைத்தையும் நிறைவு செய்ய உள்ளூராட்சித் தேர்தலால் முடியும். ஆகவே கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி சமூகத்துடன் இணைந்திருக்க கூடியவர்களைத் தெரிவு செய்யுங்கள். தமிழர்கள் தமிழர்களாலேயே அழிந்து வருகின்றனர். சகோதரி வித்தியா மீதான பாலியல் துஷ்பிரயோகம், ஆவா குழு பிரச்சினை என்பன தமிழர்களால் தமிழருக்கு ஏற்பட்ட பிரச்சினைகள். இவை போன்ற பிரச்சினைகள் இல்லாது ஒழிக்கப்பட்டு எமது சமூகம் ஏற்றப்பாதையில் பயணிக்க வேண்டும்” எனத் தெரிவித்தார்.(அ)

# ‘மைக்ரோ சிப்’ பொருத்திய

## புதிய கடவுச்சீட்டுக்கள்



கொழும்பு, ஜன.15

உயிரியல் அளவை விபரங்களைக் கொண்ட ‘மைக்ரோ சிப்’ பொருத்தப்பட்ட புதிய வகை கடவுச்சீட்டு இந்த ஆண்டு வழங்கப்படும் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரி எஸ்.ரணசிங்க தெரிவித்தார்.

“இந்தப் புதிய வகை கடவுச்சீட்டின் ஊடாகப் போலிகளை உருவாக்குவதைத் தடுக்க முடியும். பாதுகாப்பு அம்சங்களும் பலவும் இதில் உள்ளன.

புதிய வகைக் கடவுச்சீட்டை வைத்திருப்போருக்கு நன்மைகளும் உண்டு. கடவுச்சீட்டு தவறவிடப்படும் போது, கைவிரல் அடையாளத்தை பதிவு செய்வதன் ஊடாக உடனடியாகப் புதிய கடவுச்சீட்டைப் பெறமுடியும். அத்துடன், பாதுகாப்பு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் புதிய வகைக் கடவுச்சீட்டுக்கு சர்வதேச அங்கீகாரமும் கிடைக்கும்.

புதிய வகைக் கடவுச்சீட்டு 10 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும். புதிதாக வரும் விண்ணப்பங்களுக்கே இந்தக் கடவுச்சீட்டு வழங்கப்படும். தற்போது கடவுசீட்டை வைத்திருப்போர் அதன் செல்லுபடியாகும் காலம்வரை அதனைப் பயன்படுத்த முடியும்” என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரி எஸ்.ரணசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

# மகிந்த பக்கம் மகிபால தாவல்



கொழும்பு, ஜன.15

முன்னாள் சம்பரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத் மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

கேகாலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் போதே அவர் அந்தக் கட்சியுடன் இணைந்து கொண்டார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள நிலையில் தென்னிலங்கையில் மாறி மாறி கட்சித் தாவல்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மூடுங்கள் வாயை!

## மேல்மாகாண முதலமைச்சருக்கு நாமல் எச்சரிக்கை



கொழும்பு, ஜன.15

“பொய்யான கருத்துக்களைப் பரப்புவதை மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவப்பிரிய நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச எச்சரித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச குடும்பப் பிரச்சினையொன்றின் காரணமாக வெளிநாடு சென்றுள்ளதாக இசுர தேவப்பிரிய ஊடகமொன்றிடம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# மாறிய சடலங்களால் இரு வீடுகளில் குழப்பம்

கொழும்பு, ஜன.15

அனுராபுரத்திலுள்ள வைத்தியசாலைகளில் இருந்த சடலங்கள் வீடு மாறி அனுப்பப்பட்டதால் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

அனுராதபுரம் வைத்தியசாலையில் 63 வயதுடைய ஒருவரும், தம்மென்னாவ வைத்தியசாலையிலும் 90 வயதுடைய இன்னொருவரும் நோய் காரணமாக உயிரிழந்தனர். குறித்த இரு சடலங்களும் பிரேத பரிசோதனைக்கான அனுராதபுரம் சவச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு பிரதேச பரிசோதனை இடம்பெற்றதன் பின்னர் இந்த இரண்டு சடலங்களும் , தவறுதலாக மாற்றப்பட்ட நிலையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. குறித்த சடலங்களை வீடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னரே அவை மாற்றிக் கொண்டுவரப்பட்ட விடயம் இரு வீட்டாருக்கும் தெரியவந்தது. இதனையடுத்து மீண்டும் வைத்தியசாலைக்கு அந்தச் சடலங்கள் கொண்டு செல்லப்பட்டு, உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

# கனரகச் சாரதிகளுக்கு இன்னொரு பத்திரம்

கொழும்பு, ஜன.15

கனரக வாகன சாரதிகளுக்கு சாரதி அனுமதி பத்திரத்துக்கு மேலதிகமாக மற்றுமொரு அனுமதி பத்திரம் ஒன்று வழங்கப்படவுள்ளது.

இந்தப் புதிய நடைமுறை குறித்து மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது. இந்த வேலைத்திட்டம் இந்த வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பஸ் சாரதிகளும் இந்த அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். கனரக வாகனங்களைச் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்று இரண்டு வருட காலப்பகுதியை பூர்த்தி செய்த சாரதிகள், இந்த அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பிக்க முடியும். பஸ்ஸைச் செலுத்துவதற்கு இது விசேட தகுதியைக் கொண்டதாக அமையும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் சஞ்சீவ பந்து கீர்த்தி தெரிவித்துள்ளார்.(அ)

# சுஷ்மாவைச் சந்தித்த மங்கள சமரவீர

கொழும்பு, ஜன.15

இலங்கையின் நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜுக்கும் இடையில் புது டெல்லியில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பான இருதரப்பு விவகாரங்கள் குறித்து, இரண்டு அமைச்சர்களும் பேச்சுக்களை நடத்தியதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரவீஷ் குமார் தெரிவித்துள்ளார். (அ)



எதிரொலி
Ethiroli
திங்கள், 15 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## புலி இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்

யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற சொலவடை, வடக்கு-கிழக்கில் கொஞ்சம் வித்தியாசப்படுகின்றது. அந்த வித்தியாசம் அர்த்தப்பெறுமான ரீதியானதல்ல. உவமை மாற்றம் மட்டுமே. யானைக்குப் பதிலாக புலியைச் சொருகி விட்டால், அச்சொட்டாக அந்தச் சொலவடை வடக்கு-கிழக்கில் பொருத்தமாக அமைந்துவிடும்.

விடுதலைப்புலிகள் இருந்தபோது, அவர்களை ஆதரித்து, எதிர்த்தும் இரு அணிகளாக தமிழ் அரசியல் கட்சிகள் தங்களுடைய அரசியலைச் செய்தன. இந்தப் புலி ஆதரவு, புலியெதிர்ப்பு என்பதையே அந்தக் கட்சிகள் தங்கள் பிரதான கொள்கைகளாகவும் கொண்டிருந்தன. ஒருகட்டத்தில் புலியெதிர்ப்பரசியலை நடத்திய அரசியல் கட்சிகள், அப்படியான கொள்கையை முன்னெடுப்பதன் மூலம் தமக்கான அரசியல் தளத்தை மக்கள் மத்தியில் முற்றாக இழக்க நேரிடும் என்று யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, தடாலடியாகத் தம் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டன. அவையும் தீவிர புலி ஆதரவுத் தளத்தில் நின்று அரசியல் செய்து தங்கள் இருப்பை உறுதிப்படுத்தின.

அதேபோன்று புலியெதிர்ப்பு அரசியல் கட்சிகளும், யதார்த்தத்தைப் புரிந்துகொண்டபோதும், அவை புலி ஆதரவு அலைக்குள் வரமுடியாத அளவுக்கு மக்களை வதைத்ததாலும், புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டால் அரசிடம் இருந்து கிடைக்கும் நிதி நிறுத்தப்பட்டு விடும் என்பதாலும், தங்கள் அரசியல் எதிர்காலம் இருண்டுவிடும் என்று தெரிந்தும், தொடர்ச்சியாக 'பொன்னான பல சந்தர்ப்பங்களைப் புலிப்பாசிசவாதிகள் நழுவ விட்டுவிட்டனர்' என்று கீறல் விழுந்த இசைத்தட்டுப் போல், திரும்பத் திரும்ப ஒன்றையே சொல்லிக் காலம் கடத்தின.

இதெல்லாம் 2009க்கு முன்னர். அதன் பின்னர் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டன. புலித் தடங்கள் மறையத் தொடங்கிய தருணத்திலும், புலிகளை வைத்து அரசியல் செய்யும் பழக்கம் தொடரவே செய்தது. வாக்குகளை வாங்க புலிகளும், புலிகளின் தலைவர் பிரபாகரனும், மாவீரர்களும், அவர்களின் கொள்கைகளும், கொடிகளும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அவசியமாக இருந்தன. சில மாதங்களுக்கு முன்னர் கூட்டமைப்பில் பிளவு ஏற்பட்டபோது கூட, "புலிகள் உருவாக்கிய கட்சி, தலைவர் கை காட்டிய கட்சி" என சொல்லித்தான், பிரிய இருந்தவர்களை இழுத்துப் பிடித்து வைத்திருக்கிறார்கள். மக்கள் கூட அந்த எண்ணத்தில் தான் கூட்டமைப்பு என்னதான் தவறுகள் விட்டாலும், மக்கள் நலனில் அக்கறை இல்லாமல் இருந்தாலும் தொடர்ச்சியாக வாக்களித்து வருகிறார்கள்.

இப்போது வேடிக்கை என்னவென்றால், புலிகளைக் கடுமையாக எதிர்த்த தேசியக் கட்சிகள் கூட புலிகளின் பெயரைச் சொல்லி வாக்குக் கேட்கும் நிலை வந்துவிட்டது. புலிகளையும், மக்களையும் ஈவிரக்கமின்றி கொன்று குவித்து, போரை முடிவுக்கு கொண்டு வந்த மகிந்த ராஜபக்ச தலைவராக இருந்த சுதந்திரக் கட்சியும், புலிகளிடமிருந்து கருணாவைத் தந்திரமாக தம் வலையில் விழ வைத்துப் பிரித்த ஐ.தே.கவும் இப்போது வடக்கு, கிழக்கில் புலிகளை வைத்தே அரசியல் ஆதாயம் தேடுகின்றனர். இதன் உச்சக் கட்டமாக தமது தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் புலிகளின் பாடல்களையும் பகிரங்கமாக ஒலிபரப்புகிறார்கள். எந்தக் கட்சி புலிகளை அழித்ததோ, அதே கட்சியின் பிரசாரத்துக்கு புலிகளின் பாடல்களைப் போட்டாலே வாக்குகள் கிடைக்குமென்பது எவ்வளவு பெரிய முரண்நகை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சமஷ்டிக்கும் தேர்தலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

## சொல்கிறது ஜே.வி.பி



கொழும்பு, ஜன.15

வடக்கு-கிழக்கு சமஸ்டித் தீர்வைக் கொடுக்கும் திட்டத்துக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலான தற்போதைய கள நிலவரம் பற்றி கருத்துக் கூறிய அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸவே இவ்வாறு கூறினார்.

"இப்போது வந்திருக்கும் தேர்தல் ஜனாதிபதியையோ ஆட்சியையோ மாற்றும் தேர்தல் அல்ல. உங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் தேர்தலே இது. இந்தத் தேர்தலுக்கு சிறிதும் பொருத்தமில்லாத பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.

புதிய அரசியலமைப்பு வரப்போகின்றது வடக்கு-கிழக்குக்கு சமஸ்டி தீர்வு கொடுக்கப்படவுள்ளது. நாடு பிளவுபடப் போகின்றது. தமிழீழம் உருவாகப் போகின்றது என்றெல்லாம் போலிப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. இது பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேர்தல். இந்தத் தேர்தல் மேற்கூறிய விடயங்களில் தாக்கம் செலுத்தாது.

ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலிலோ இதுபற்றிப் பேசினால் பரவாயில்லை. புதிய அரசமைப்புக்கோ அல்லது அரசியல் தீர்வை வழங்கும் திட்டத்துக்கோ இந்தத் தேர்தல் பொருந்தாது. ஆகவே, மக்கள் தேவையற்ற போலிப் பிரசாரங்களை நம்ப வேண்டாம்.

மஹிந்த அணியினர் போட்டியிடும் ஜீ.எல்.பீரிஸின் கட்சிதான் இந்தப் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. மாகாண சபை அதிகாரங்களைத் தாண்டிய அதிகாரப் பகிர்வை வடக்கு-கிழக்கிற்கு வழங்குவதற்காக 2000 ஆம் ஆண்டு அதிகாரப் பகிர்வு பொதி ஒன்றைத் தயாரித்தவர்தான் இந்த பீரிஸ். இப்படிப்பட்டவர்கள் இன்று அதிகாரப் பகிர்வின் பாதிப்பு பற்றிப் பேசுகின்றனர்.

அதுமட்டுமல்ல எல்லாத் தேர்தல்களிலும் மின்சாரக் கதிரையைக் காட்டிக் காட்டியே வாக்குப் பெற்றார்கள். பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இந்த ஊழல் வாதிகள் இன்று அரசியலமைப்பையும் அதிகாரப் பகிர்வையும் காட்டி வாக்குக் கேட்கின்றனர். இதை மக்கள் நம்ப வேண்டாம்.

இந்தத் தேர்தலில் பழைய திருடர்களுக்கு வாக்களிக்கவும் வேண்டாம் திருடர்களை பிடிப்பதாகக் கூறிக்கொண்டு வந்து ஆட்சியைப் பிடித்து இப்போது திருடிக்கொண்டிருக்கும் திருடர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்" -என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# முதுகெலும்பிருந்தால் வெளியே போங்கள்

## மகிந்த அணிக்கு மைத்திரி சவால்



கொழும்பு, ஜன.15

"புதிய கட்சியைக் கட்டியெழுப்புகின்றவர்கள் அரசியல் அரசியல் முதுகெலும்புள்ளவர்களாயின் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகி, புதியகட்சியை அமைக்க வேண்டும். புதிய கட்சியில் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளவில்லை என ஊடகங்களிடம் சொல்லும் இவர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விடுத்து ன்னொரு கட்சிக்கு வாக்களிக்குமாறு மக்களுக்கு கூறுவது நகைப்புக்கிடமானதாகும்" என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த தரப்பினரைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்சியின் செயலாளரும், தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் , கடந்த அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகித்தவர்களாகவும் உள்ளனர் . ஆனால் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு அவர்கள் செய்யும் துரோகமானது இரண்டாவது பண்டாரநாயக்க படுகொலையாகும்.

ஊழல் மோசடிகளை ஒழித்துக் கட்டுவதிலும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதிலும் தான் ஈடுபட்டு வருவது நாட்டு மக்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் தான்.

நான் சுகாதார அமைச்சராக இருந்தபோது நாட்டு மக்களுக்காக மேற்கொண்ட தீர்மானங்களின் காரணமாக புகையிலைக் கம்பனிகள் உள்ளிட்ட பல்தேசிய கம்பனிகள் என்னுடன் கோபித்துக் கொண்டன. போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் காரணமாக போதைப் பொருள் வியாபாரிகள் என்னை எதிரியாக ஆக்கிக்கொண்டனர் இன்று ஊழல் மோசடிக்கு எதிராக ஆணைக்குழுக்களை அமைத்து வருவதும் இலகுவான விடயமல்ல .

எனினும் நாட்டு மக்கள் எப்போதும் என்னுடன் இருப்பதாலேயே நான் துணிவுடன் இப்படியான காரியங்களைச் செய்ய முடிகின்றது" என்றும் அவர் தெரிவித்தார்.(அ)

# வேட்பாளர்களின் பின்னணியை உன்னிப்பாக ஆராய உத்தரவு

கொழும்பு, ஜன.15

"நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பின்னணி தொடர்பில் ஆராயுமாறு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. வேட்பாளர்களாகவுள்ள முன்னாள் அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும்"

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் ஆர்.எம்.ஏ.எல். ரட்ணாயக்க தெவித்தார்.

"உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய சட்டத்தின் அடிப்படையில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள் தாம் போட்டியிடுகின்ற வட்டாரத்தில் குறைந்தது ஒரு வருடத்துக்குள் பணியாற்றியிருக்கக் கூடாது. மேலும் வேட்பாளராக உள்ள அரச உத்தியோகத்தர் சம்பளமற்ற விடுப்பையும் பெற்றிருக்கவேண்டும்.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றாமல் எவராவது தேர்தலில் போட்டியிடுகின்றனரா என்பதை ஆராயுமாறு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறுகின்ற எந்தவொரு வேட்பாளரும் உள்ளூராட்சி சபை உறுப்பினராகத் தெரிவாவதற்குத் தகுதியற்றவர்.

குற்றவியல் வழக்குகள் உள்ள வேட்பாளர்கள் தொடர்பில் அவர்களது கட்சிகளின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் "என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தை மீறி அரச உத்தியோகத்தர்கள் சுமார் 100 பேர் வேட்பார்களாக உள்ளனர் எனவும் பவ்ரல் அமைப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


(அ)

## இன்று நாளும் கோளும்

15.01.2018 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 28 ஆம் நாள்
சதுர்த்தசி காலை 06.30 மணி வரை — மூலம் 05.59 வரை — அமிர்தயோகம்
இராகுகாலம் 07.30 - 09.00 — சுபநேரம் மு.ப. 06.30 - 07.30 — எமகண்டம் பி.ப. 10.30 - 12.00


| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | நன்மை | இலாபம் | செலவு | உயர்வு | முயற்சி | ஆர்வம் | பரிவு | விருப்பம் | சிந்தனை | பரிசு | கவனம் |


# பட்டம் பற பற..!



வல்வை உதயசூரியன் உல்லாசக் கடற்கரையில் நேற்று நடைபெற்ற பட்டத் திருவிழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கடற்றொழில் அமைச்சர் மகிந்த் அமரவீர, கல்வியில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிப்பதையும், போட்டியில் கலந்து கொண்ட பட்டங்களில் சிலவற்றையும் படங்களில் காணலாம். (அ–66)











## காதல் கதை வேண்டாம் மக்களே சிந்தியுங்கள்

வணக்கம் பிள்ளையள். நேற்றைக்கு எங்கை பாத்தாலும் ஒரே வெடியள்தான் சனம் என்னெண்டாலும் சந்தோஷமாத்தான். இருக்க விரும்பினம். துக்கமானதை அவை கன காலம் மனதுக்கை வைச்சிருக்க விரும்பினமில்லை எண்டு தெரியுது. ஆனால் துக்ககரமா எங்களுக்கு நடந்த அத்தனையையும் மனதுக்கை வைச்சிருக்க வேண்டிய தேவை இருக்கு. அப்பதான் நீண்ட காலத்துக்கு நாங்கள் சந்தோஷமா எப்பிடி இருக்கலாம் எண்டதை வடிவாப் பிளான் பண்ணலாம். பட்ட கஷ்டம் அடுத்தமுறை வராமலிருக்கிறதை வடிவாப் பாத்துக் கொள்ளலாம்.

நேற்றைக்கு நடந்த வெடி கொளுத்தலாலை ஒண்டைப் பாத்தன். வழக்கமா றோட்டிலை நிண்டு றோட்டை நாசம் பண்ணிக்கொண்டு நிக்கிற நாயள் ஒண்டையும் றோட்டிலை காணேல்லை. எல்லாம் வெறும் வளவுக்குள்ளை ஓடிப்போய் வைக்கல் பட்டறைக்குள்ளையும், விறகுக் கும்பியளுக்கையும் ஒழிச்சிருந்திட்டிதுகள். நேற்றைக்குப் பின்னேரம் வரையும் ஒண்டையும் றோட்டிலை காணேல்லை. விதம் விதமாச் சனம் பொங்கின பொங்கலையும் தின்ன வரேல்லை. எல்லாரும் உஞ்சு...உஞ்சு எண்டு கூப்பிட்டுக் கேட்டது. எங்களுக்குக் கொண்டாட்டம், நாயளுக்குத் திண்டாட்டம். எல்லாச் சீவனுகளும் ஒரே நேரத்திலை சந்தோஷமாச் சீவிக்கிறதெண்டது கஷ்டம் தான். ஒரு ஆளின்ரை சந்தோஷத்திலை இன்னொரு ஆள் துக்கப்பட வேண்டி இருக்கு. ஒரு ஆளின்ரை சந்தோஷத்திலை இன்னொரு ஆளின்ரை சந்தோஷம் மறைஞ்சு போகுது. எல்லாம் ஆண்டவன்ரை சித்தம் எண்டதுதான் என்ரை எண்ணம்.

அடுத்ததாப் பொங்கல் வர முன்னமே சம்பந்தருக்கும், மாவைக்கும், ஸ்ரீதரனுக்கும், விசேஷமா சுமந்திரனுக்கும் சனம் நல்லாப் பொங்கி, வேண்டாம், வேண்டாம் எண்ணப் பிரசாதத்தைக் குடுத்திட்டிதுகள். அவை வாழ்க்கையிலை மறக்கேலாத விசியமாப் பண்ணிப் போட்டினம். ரீவியிலை திரும்பத் திரும்பக் காட்டினவங்கள். அதிலையும் மற்றவைக்கு எல்லாம் சாதாரணப் பொங்கல். சுமந்திரனுக்கு மட்டுந்தான் வேலூர் சர்க்கரைப் பொங்கல். நல்லாத் திண்டிட்டார். நான் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் பொங்கிப் படைச்சதைத்தான் சொல்லுறன். என்ரை வாழ்க்கையிலை கருணாவைக் கூடச் சனம் உப்பிடித் திட்டினதைக் காணேல்லை. பச்சைத் துரோகியள் எண்டு திட்டிச்சுதுகள். அதுக்கை ஒரு அம்மா அழுது..அழுது சொன்னவ, தாங்கள் ஜனதிபதியைச் சந்திக்கப் போன நேரத்திலை சுமந்திரன் உள்ளிட்டு ஏதோ துரோகத்தைச் செய்து போட்டாராம். அதென்ன துரோகம் எண்டதை வடிவாச் சொல்லேல்லை. இனி அந்தச் சனத்திட்டைக் கேக்க வேணும். இல்லாட்டிச் சுமந்திரனிட்டைத்தான் கேக்க வேணும்.

உதுகள் எல்லாத்தையும் பாக்கேக்கை இந்த முறை எலக்சனிலை வடிவாப் பாத்துத்தான் செய்ய வேணும் போலை கிடக்கு. நான் மட்டுமில்லை எல்லாரும் என்ரை பாட்டன், பூட்டன்ரை காலத்திலை இருந்து அவைக்குத்தான் போடுறனாங்கள், அதாலை இந்த முறையும் அவைக்குத்தான் எண்ட "காதல் கதை" வேண்டாம். சுயமாச் சித்தியுங்கோ. அப்ப "றலி" சைக்கிள்தான் வாங்கி ஓடின்னாங்கள். இப்ப "லுமாலா" வாங்கி ஓடுறம். அதுதான் வேணும் எண்டு நிண்டால் அடைப்பு உருவிப்போம். காலத்திற்கேற்ற மாதிரியான சிந்தனையும், செயற்பாடும் வேணும். தயவு செய்து அடம்பிடிக்காமல் சரியான ஆக்களுக்குப் போடுங்கோ. இது ஒரு பரீட்சை. இதிலை புது ஆக்களுக்கும் இடம் குடுத்துப் பாருங்கோ. எப்பிடிச் செய்வினம் எண்டு பாத்திட்டுப் பார்லிமெண்ட் எலக்சனிலையும் அவைக்குக் குடுப்பம். என்னெண்டு மனத்தை மாத்திறதெண்டு யோசிக்கிறியளோ? அந்த ரீவியிலை காட்டின பிள்ளையளைப் பறிகுடுத்திட்டுக் கத்திற அம்மாமாரை ஒருக்கா யோசியுங்கோ. அப்ப தெரியும் அவையின்ரை நோக்கம் என்ன வெண்டு. சைக்கிள்ளை திரிஞ்சவை எம்பியா வந்தாப் பிறகு, காமராஜர் மாதிரி ஆரேன் இருக்கினமோ? பிறகு சுகத்தை அனுபவிச்ச உவைக்கு அரசாங்கத்தை எதிர்க்க மனம் வருமோ? "பிரச்சினையைச் சந்திக்கிற மக்களே சிந்தியுங்கள்"

**- வில்லங்கம் விநாசி**

# உலகை ஏமாற்றவே பிள்ளையானுக்கு பதவி

## யோகேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

மட்டக்களப்பு ஜன.15

"போராளிகளாக இருந்து தங்களுடன் இணைந்தவர்களை ஆட்சியாளர்களாக நியமித்துள்ளோம் என்று சர்வ தேசத்தை ஏமாற்றுவதற்காகவே மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது" எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் அலுவலகத்தை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"2008 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி முஸ்லிம் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்ததன் காரணமாக தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்ற நோக்கத்துக்காகவே, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்ட பிள்ளையானுக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வாக்களித்தார்கள். இந்தத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடவில்லை.

'போராளிகளாக இருந்து அரசாங்கத்துடன் இணைந்தவர்களை முதலமைச்சராக நியமித்துள்ளோம். வடகிழக்கினைப் பிரித்துவிட்டோம். பிரிந்த வடக்கு கிழக்கிலே கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்து வந்த பிள்ளையானுக்கு கொடுத்துள்ளோம். இந்த நிலையில், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக மகிந்த ராஜபக்ச அர்சாங்கத்தால் பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

பிள்ளையான் முதலமைச்சராக இருந்த காலத்தில் மாகாண சபையில் தன்னால் முடிந்தவரை உழைத்தார். வெளிநாடுகளிலிருந்து வந்த நிதிகள் சுருட்டப்பட்டன. கொரிய நாட்டுக்கு வேலைக்கு அனுப்ப வந்த நிதி, மட்டக்களப்பில் முதலமைச்சர்கள் மாநாடு நடாத்திய நிதி போன்றவை தொடர்பாக கணக்குகள் இல்லை. என அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை வட்டார வேட்பாளர் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோ. கருணாகரம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டு-அம்பாறை இணைப்பாளர் க.பிரபாகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ)

# துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் பலி

கொழும்பு, ஜன.15

ரக்வான - கொஹெறாகந்த - வெபுவெல்வத்த வீதியில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.69 வயதுடைய நபரே இவ்வாறு துப்பாகிச் சூட்டில் பலியானவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தத் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த நபர் கஹவத்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்துக்கான காரணம் இன்னமும் தெரியவரவில்லை. (அ)

# அந்தநாள் ஞாபகம்



## 15.01.1908

யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக்கும் இடையில் பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

# மோசடிகளால் வெறுப்பு

## ஜே.வி.பி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.15

அரசியல்வாதிகளின் மோசடிகள் காரணமாக மக்களுக்கு அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி யின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றுக்காக மக்கள் சிறந்த மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.(அ)

# கடலில் மாணவர் மாயம்

கொழும்பு, ஜன.15


பாணந்துறைக் கடற் பரப்பில் நீராடச் சென்ற மாணவர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடலில் மாணவர்கள் சிலர் நீராடிக் கொண்டிருந்த போது, 2 மாணவர்கள் அலையில் இழுபட்டுச் சென்றனர். எனினும் அவர்களில் ஒருவர் கடற்படையினரால் காப்பற்றப்பட்டு பாணந்துறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 17 வயதுடைய மற்றைய மாணவர் காணாமல் போயுள்ளார். (அ)

# ஐ.தே.கவை தோற்கடிப்போம்

## ஹக்கீம் சூளுரை



கொழும்பு, ஜன.15

"அம்பாறையில் யானைச் சின்னத்தை எங்களிடம் தந்த ஐக்கிய தேசியக் கட்சி இங்கு அமீர் அலியிடம் கொடுத்துள்ளது. நாங்கள் யர்னையைத் தோற்கடித்துக் காட்டும்போதே, தான் விட்ட தவறை பிரதமர் உணர்ந்துகொள்வார். எனவே வாழைச்சேனையில் ஐக்கிய தேசியக் கட்சியையும், இரட்டைக்கொடியையும் தோல்வியடைச் செய்யவேண்டும் "என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் ஒட்டகச் சின்னத்தில் (சுயேச்சைக் குழுவில்) போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களின் தேர்தல் பிரசார அலுவலகங்களை வாழைச்சேனையில் திறந்துவைத்து, உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கடந்த நாடாளுமன்ற தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் மரச்சின்னத்தில் போட்டியிட்ட காரணத்தினால் அமீர் அலி சில நூறு வாக்குகளால் தப்பிப்பிழைத்து உறுப்பினராகத் தெரிவானார். கல்குடா தொகுதியில் முஸ்லிம் காங்கிரஸ் பெரிய தொரு முன்னேற்றத்தை அந்தத் தேர்தலில் கண்டுகொண்டது.

பசீர் சேகுதாவூதுக்கு மூன்று முறை தேசியப்பட்டியல் கொடுத்து நான்காவது தடவையும் கொடுக்கவில்லையென்பதால், தலைவர் மீது அவதூறு சொல்லிக்கொண்டு திரிகிறார். அதேபோன்று ஹஸன் அலியும் இரண்டு தடவை தேசியப்பட்டியல் பெற்றுக்கொண்டு மூன்றாவது தடவையும் அதைக் கேட்டு முரண்பட்டுச் சென்றுள்ளார். கட்சியில் அனுபவித்தவர்கள் விலகிச் சென்றாலும், கட்சியின் ஆதரவாளர்கள் எங்களுடன் தான் இருக்கின்றனர்.

அம்பாறையில் யானைச் சின்னத்தை எங்களிடம் தந்த ஐக்கிய தேசியக் கட்சி இங்கு அமீர் அலியிடம் கொடுத்துள்ளது. நாங்கள் யானையை தோற்கடித்து காட்டும் போது தான் விட்ட தவறை பிரதமர் உணர்ந்து கொள்வார். மறைந்த தலைவர் அஷ்ரபின் காற்றுக்கூட படாத மயில் கட்சியின் தலைவர் இப்போது அவரின் கனவுகளை பேசிக்கொண்டு அவரது படத்தையும் போட்டு போஸ்டர் அடித்து திரிகிறார். இப்படியான சூழ்நிலைகளில் அசல் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் இவர்களுக்கு சோரம்போக முடியாது. நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற இந்த நேரத்தில்தான் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும். இதற்கு நீங்கள் எங்களின் கரங்களை பலப்படுத்த வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார். (அ)



# பெண்களுக்கு மது எமக்குத் தெரியாது

கொழும்பு, ஜன.15

"நாட்டிலுள்ள மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கு வழங்கப்பட்டிருந்த நேரத்தை நீடிப்பதற்கும், பெண்கள் மதுபான விற்ப்னை, கொள்வனவில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவதற்கும் அரசாங்கம் சட்டம் உருவாக்கியமை தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது. இது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேட அறிவிப்பொன்றை விடுக்க தீர்மானித்துள்ளது" என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

"நிதி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த தீர்மானம் குறித்து அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்தவித அறிவிப்பும் செய்யப்படவில்லை. இந்த நடவடிக்கை ஜனாதிபதியின் கொள்கைக்கு எதிரானது" எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# சிறுமிக்காக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன.15

கேகாலை - அவிசாவளை வீதி பிங்தெனிய - தொரணகஹபிடிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கண்ணீர் புகை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது.

குறித்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் 7 வயதுச் சிறுமி ஒருவர் பேருந்துடன் மோதுண்டு, உயிரிழந்தார். இதனைக் கண்டித்து அங்கு, நேற்றுமுன்தினம் இரவு 11 மணி வரை இவ்வாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கட்டுப்பாட்டை மீறி, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்க முயன்றதால் பொலிஸாரால் கண்ணீர்ப் புகைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியின் விபத்துடன் தொடர்புடைய தனியார் பஸ் சாரதி கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# வவுனியா பஸ் நிலையத்தில் பொங்கலோ பொங்கல்



வவுனியா, ஜன.15

வவுனியாவில், புதிய பஸ் நிலையத்தில் தைப்பொங்கல் நிகழ்வு நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் சாரதிகள், நடத்துநர்கள், உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு ஒரு வருடமாகப் பூட்டப்பட்டு இருந்த புதிய பஸ் நிலையம் பல்வேறு குழப்பங்களுக்கு மத்தியில் வட மாகாண முதலமைச்சரின் முயற்சியால் அண்ம்மயில் இயங்க ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழீழத்தை வழங்கும் அரசின் சதியை தடுப்போம்

## விமல் வீரவன்ச அறைகூவல்

கொழும்பு, ஜன.15



"தமிழர்களுக்கு வடக்கு-கிழக்குக்கு பிரிவினையின்மூலம்தமிழீழத்தை வழங்க நினைக்கும் அரசின் சதித்திட்டத்தை தோற்கடிக்க வேண்டுமென்றால் இந்நாட்டு மக்கள் அனைவரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். வடக்கு-கிழக்குக்கு சமஷ்டித் தீர்வை வழங்குவதற்கு அரசு நடத்தும் சர்வஜன வாக்கெடுப்பாகவே இந்தத் தேர்தலைப் பார்க்க வேண்டும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

"இப்போது இடம்பெறப்போவது சிறிய தேர்தல்தான். கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிது. சிறிய தேர்தல் என்றாலும் அதன் வெற்றி இந்த நாட்டின் இறைமையுடன்-பாதுகாப்புடன் -நேரடியாகத் தாக்கம் செலுத்தக்கூடியது. இந்த நாட்டுக்கு எதிராக சர்வதேச சக்திகளும் புலம்பெயர் தமிழர்களும் மேற்கொண்டுவரும் சதி நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிப்பதற்கு இத்தேர்தலில் அரசு அடையும் வெற்றி உதவி புரியும்.

நாட்டில் இருந்து வடக்கு-கிழக்கை பிரித்து அதில் தமிழர்களுக்கு தனிநாட்டை அமைத்துக் கொடுப்பதே இந்தச் சக்திகளின் முதல் திட்டம். இந்தத்தேர்தலில் அரசு வெற்றி பெற்றால் இந்தச் சதி மிக இலகுவாகச் சாத்தியப்படும். இதை ஒரு சிறிய தேர்தலாக மக்கள் கருதிவிடக்கூடாது. நாட்டை இரண்டாகப் பிரித்து தனித் தமிழீழத்தை அமைக்கும் சர்வஜன வாக்கெடுப்பாகவே இதைப் பார்க்க வேண்டும்.

இந்த சதித் திட்டத்தை மிகவும் இலகுவாக நிறைவேற்றும் வகையில்தான் புதிய அரசியலமைப்புதயாராகின்றது.உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசை தோற்கடிப்பதன் மூலம்தான் இந்த தேச விரோத அரசியலமைப்பையும் தோற்கடிக்க முடியும்.

இன்று எமது அணியில் இருந்தும் சிலர் அரசுடன் இணைந்துள்ளனர். நானும் இணையவுள்ளேன் என்று அரச தரப்பினர் வதந்திகளைப் பரப்பி விட்டுள்ளனர். தேசத்துரோகிகளின் கூட்டத்தோடு நான் ஒருபோதும் இணையமாட்டேன். நான் இணையப்போகிறேன் என்று கூறுவதன் ஊடாக எங்களின் வெற்றியைத் தடுப்பதற்கு அவர்கள்முயற்சி செய்கின்றனர். அது ஒருபோதும் நடக்காது.

கிராம மட்டத்தில் எமக்கே மக்கள் ஆதரவு அதிகம்.நாம் வெற்றி பெறுவதுஉறுதி. நாம் அனைத்து சபைகளையும் கைப்பற்றி உள்ளூராட்சி சபைகளில் ஆட்சிஅமைப்போம். அதனூடாக தேசிய அரசைக் கைப்பற்றுவோம்.இந்த மக்கள் விரோத அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தமக்களுக்கு இப்போது வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை நழுவவிடக்கூடாது" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## இன்றைய கேலிச்சித்திரம்




# தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐ.நா. நட்புறவு அமையக் கூட்டம்

தென்மராட்சி,ஜன.15

ஐக்கிய நாடுகள் சபை நட்புறவு அமையத்தின், தென்மராட்சி பிரதேச சம்மேளனத்தின் அபிவிருத்தி திட்ட பொதுக்கூட்டம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை மாலை 3மணிக்கு இடம்பெற்றது.

இதன் போது அமையத்தால் 2018 ஆம் ஆண்டில் முன்னெடுக்கவுள்ள விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இந்த அமையத்தின் ஊடாக தென்மராட்சி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் "எங்கும் பசுமை" மற்றும் " கல்விக்கு கரம் கொடுப்போம்" போன்ற செயற்றிட்டங்களுடன் மருத்துவ மற்றும் சுகாதார அபிவிருத்தி திட்டங்களும் 2018 ம் ஆண்டில் முன்னெடுக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விபத்துக்களை குறைக்கும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்வுகளையும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. குறித்த அமையத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சு.நக்கீரன், ஊடக ஒருங்கிணைப்பாளர் த.சுபேசன் மற்றும் அமையத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் இதன்போது கலந்து கொண்டனர். (அ)

# தொடர்ச்சிகள்

**மைத்திரி...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவால் ஐ.தே.க வட்டாரத்தில் பெரும் சலசலப்புத் தோன்றியுள்ளது. இது சுதந்திரக் கட்சிக்கும், ஐ.தே.கவுக்கும் இடையிலான உறவுநிலையைப் பெரிதும் பாதிக்கும் எனக் கூறப்படுகின்றது.

உள்நாட்டு மதுபானங்கள் மற்றும் வெளிநாட்டு மதுபானங்களை விற்பனை செய்யும் நிலையங்களை வர்த்தகத்துக்காகத் திறந்து வைக்கும் காலம், கடந்த வியாழக்கிழமை முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்தது.

அதன்படி மதுபானசாலைகளை காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்க முடியும் என்று நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் கையொப்பமிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியது.

அத்துடன் மதுபானத் தயாரிப்பு மற்றும் விற்பனை நிலையங்களில் பெண்களைப் பணிக்கு அமர்த்துவது மற்றும் பெண்களுக்கு மதுபானங்களை விற்பனை செய்வது போன்றவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையையும் நீக்குவதாகவும் நிதியமைச்சு அறிவித்தது.

இந்த நிலையில் அகலவத்தை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி, இந்தப் புதிய சுற்றறிக்கைகளை இன்று திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கம் செய்ய உத்தரவிட்டுள்ளதாக அறிவித்தார்.

"ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் நீதியான சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். கடந்த மூன்று வருடங்களில் இதற்காகப் பல அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளோம்.

இன்று நாட்டில் ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்துடன் கூடிய ஆட்சியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சுதந்திரத்தை மனிதாபிமானத்துக்குட்பட்ட வகையில் அனுபவிக்க வேண்டும். சிலர் அந்த சுதந்திரத்தை இல்லாமற் செய்வதற்கு வழியமைக்கின்றனர். அவ்வாறான ஒரு செயற்பாடே மதுபானம் தொடர்பான பல இறுக்கமான நடைமுறைகள் தளர்த்தப்பட்ட விவகாரமாகும். இது உடனடியாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டு, கடந்த வாரம் மதுபான விற்பனை நேரம், பெண்களுக்கு மது வாங்க, விற்க அனுமதி என்பன தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களை நீக்க உத்தரவிட்டுள்ளேன். இந்த நீக்கம் திங்கட்கிழமை முதல் (அதாவது இன்று) நடைமுறைக்கு வரும்.

நீதியான சமூகம் குறித்து பேசுவதைப் போன்று நீதியான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். வாகன விபத்து ஒன்று தொடர்பில் எனது சகோதரர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் நான் பொலிஸாருடன் அது தொடர்பாக எதுவுமே பேசவில்லை. நாட்டின் வரலாற்றில் ஜனாதிபதி, பிரதமர் அல்லது அமைச்சர் ஒருவரின் சகோதரர் ஒருவர் வாகன விபத்து தொடர்பில் சிறை செல்ல வேண்டி ஏற்பட்டது என்று இருந்தால் அது எனது சகோதரர் மட்டுமே.

மக்கள் எதிர்பார்க்கின்ற நீதியான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு நான் அனைவருக்கும் ஒரே கொள்கையையே பின்பற்றுகின்றேன். ஊழல் மோசடிகளை ஒழித்துக் கட்டுவதில் கட்சி, நிறம் என்ற எந்தவொன்றும் எமக்கு முக்கியமானவை அல்ல" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

**நாடு கடந்த...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது குடும்பத்தினரும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை நாடு கடத்தப்பட்டனர் என குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வியாழக்கிழமை பிற்பகல் அபுதாபியில் இருந்து எதிஹாட் விமான மூலம், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும், நேற்று முன்தினம் காலை சிறிலங்கன் விமானசேவை மூலம், பாங்கொக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கனடாவின் ரொரன்டோ நகரில் இருந்து நாடு கடந்த அரசின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட சுரேஸ்நாத் இரத்தினபாலன், இலங்கை அரசுக்கு எதிரான தீவிரமான கருத்துக்களை வெளியிட்டு வந்தவர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இவரை இலங்கைக்குள் நுழைய குடிவரவு அதிகாரிகள் அனுமதி மறுத்திருந்த நிலையில், பாங்கொக்குக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

இவர்களைத் திருப்பி அனுப்பும் உத்தரவை நீக்கம் செய்வதற்கு கொழும்பு அமைச்சர்கள் சிலர் முயற்சி செய்ததாகவும், ஆனால் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளின் இறுக்கமான போக்கினால் அது சாத்தியமாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

நாடு கடத்தும் உத்தரவை நீக்கம் செய்யுமாறு கோரிக்கை விடுத்த அமைச்சர்களிடம், அதனை எழுத்துமூலம் தருமாறு குடிவரவுத் திணைக்களம், கோரியதாகவும் அவர்கள் அதற்கு இணங்காத நிலையில், சுரேஸ்நாத் இரத்தினபாலனும் அவரது குடும்பத்தினரும் நாடு கடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (அ)

**புலிப்புத்தகத்துடன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணசேகர தெரிவித்துள்ளார்.

148 தோட்டக்கள், ரி.56 ரக துப்பாக்கிக்கான ரவை, நான்கு செல்போன்களும் அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளன. ஆயுதங்களுடன் 37 வயதான நபர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அதிரடிப்படையினர் கூறியுள்ளனர். (அ)

**சூரியன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் சூசை சந்தானம் என்பரின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் சுமார் ஆறு பேர் கொண்ட குழுவினர் தலைக்கவசம் அணிந்தபடி, மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ என்பவற்றில் வந்துள்ளனர். பின்னர் குறித்த வேட்பாளரின் வாசலில், வீட்டுச் சின்னம் பொறித்த விளம்பரத்தை ஒட்டியபின் அவ்விடத்தில் ஒரு சில மணி நேரம் நின்று பட்டாசுகள் கொளுத்தி வளவுக்குள் எறிந்ததுள்ளனர். அத்துடன் வீட்டின் கூரை மீதும் கற்கள் எறிந்ததாக முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அட்டகாசம் புரிந்தவர்கள் அச் சமயத்தில் மது போதையில் நின்றதாகவும் பாதிப்புக்குள்ளானவர் தெரிவித்துள்ளார்.

அவரின் முறைப்பாட்டை அடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், வீட்டுக் கதவில் ஒட்டப்பட்ட மாற்றுக் கட்சியின் தேர்தல் விளம்பரத்தையும் அகற்றினர்.(அ)

**புலிகளின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்களும் ஒலிக்க விடப்பட்டிருந்தன.

இது தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாது. என்றாலும், இது சட்டமீறலாகும். இன, சாதி அடிப்படையிலான பரப்புரைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல கட்சிகளின் அரசியல்வாதிகள் இதுபோன்று புலிகளின் பாடல்களை ஒலிபரப்புகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தமிழ்த் தேசியத்தைத் தூண்டும் இதுபோன்ற பாடல்களைப் பயன்படுத்தியே பரப்புரை செய்கின்றனர். எனவே இதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளேன்"என்றார்.(அ)

**பொம்மலாட்டம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத் தலைவர் சு.கெங்காரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீராவும், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் எயார் ஆட்டோ, இரட்டை வால் திமிங்கிலம், இராட்டினம், குத்துச்சண்டை வீரர்கள், ஆமை, விசித்திர ஹெலிகொப்டர், பறக்கும் தட்டு, பறக்கும் பொம்மலாட்டம் , மணிக்கூடு, குப்பை வாளி, வீதி செப்பனிடும் இயந்திரம் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பட்டங்கள் வானில் பறந்தன. இவற்றில் பறக்கும் பொம்மலாட்டம் அனைவரையும் கவர்ந்து, முதலிடத்தையும், பரிசுகளையும் அள்ளியது. (அ)


(மேலும் சில படங்கள் பக்கம் 4 இல்)

**விதி மீறல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுள்ளனர். அவர்களில் பலர் பொலிஸ் பிணையிலும் சிலர் நீதிமன்றப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பான 55 சம்பவங்கள் இதுவரையில் பதிவாகியுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறிய 13 முறைப்பாடுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டும் பதிவாகின. அவை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்அடிப்படையில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்தது. (அ)



# மன்னிப்புக் கேள்!

ட்ரம்புக்கு எதிராக ஆபிரிக்க நாடுகள் போர்க்கொடி

வோஷிங்டன், ஜன.15


அமெரிக்காவில் குடியேறியுள்ள ஆபிரிக்கர்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களை முன்வைத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராக ஆபிரிக்க நாடுகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. உடனடியாக ட் ரம்ப் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும் அவை வலியுறுத்தியுள்ளன.

ஜனாதிபதி ட்ரம்புக்கும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் குடியேற்ற உடன்படிக்கை ஒன்றை உறுதி செய்வது தொடர்பான கூட்டம் ஒன்று வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றது. கூட்டத்தில் பேசிய ட்ரம்ப், "அந்த 'மலவாசல்' நாடுகளில் இருந்து வந்த மக்களை நாம் ஏன் இங்கே வைத்திருக்க வேண்டும்? அவர்களுக்கு பதிலாக நோர்வே போன்ற நாடுகளில் இருந்து வருகிற குடியேறிகளை நாம் வைத்துக்கொள்ளலாமே? நமக்கு இன்னும் கூடுதலான ஹைதி நாட்டினர் எதற்காக வேண்டும்? அவர்களை வெளியேற்ற வேண்டும்" என்று கூறினார். இதனால் சர்ச்சை எழுந்துள்ளது. சர்ச்சைக்கு உரிய இந்த அவதூறு கருத்தை வெளியிட்டதற்காக ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி எம்.பி.க்கள் மட்டுமல்லாது, ஆளும் குடியரசுக் கட்சி எம்.பி.க்களும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

அவருடைய கருத்துக்கு எதிராக இப்போது ஆபிரிக்க நாடுகள் பலவும் போர்க்கொடி தூக்கியுள்ளன. அவர் தனது இனவாதக் கருத்துக்கு மன்னிப்பு கோர வேண்டும் என்றும் அவை வலியுறுத்தியுள்ளன.

55 நாடுகளை உறுப்பினர்களாக கொண்டு உள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் வாஷிங்டன் தூதரகம் ட்ரம்பின் கருத்துப் பற்றிக் கூறுகையில் "இது மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. சீற்றத்தை ஏற்படுத்துகிறது. ட்ரம்ப் நிர்வாகம் ஆபிரிக்கர்களைத் தவறாகப் புரிந்து கொண்டு உள்ளது. அமெரிக்க நிர்வாகத்துக்கும், ஆபிரிக்க நாடுகளுக்கும் இடையே பேச்சு நடத்திய வேண்டிய தேவை ஏற்பட்டு உள்ளது" என்று குறிப்பிட்டது. (இ)

# உறைந்த தலைமுடி சிறுவனுக்கு ஆதரவு



பீஜிங்,ஜன.15

சீனாவில் கடும் பனிப்பொழிவு நாளில் நடந்தே பாடசாலை சென்றதால் தலைமுடி பனியால் உறைந்துபோன சிறுவனுக்கு பொதுமக்களின் ஆதரவு பெருகி வருகின்றது.

உரிய பாதுகாப்பின்றி பொதுமக்கள் வெளியே செல்ல அஞ்சும் காலை வேளையில் 8 வயதான சீனச்சிறுவன் ஒருவன், குளிருக்காக ஒரு மேலாடை மட்டுமே அணிந்து கொண்டு பாடசாலைக்கு நடந்து சென்றுள்ளான்.

இதனால் அவனது தலைமுடி மொத்தமும் பனியால் உறைந்துபோனது. அது மட்டுமின்றி உறைந்த பனியை அகற்றாமல் அப்படியே குறித்த சிறுவன் தேர்வுக்கும் தயாராகியுள்ளான். குறித்த சிறுவனின் நெஞ்சை உலுக்கும் புகைப்படம் இணையதளங்களில் வெளியாகி அனைவரது கவனத்தையும் ஈர்த்ததுடன் பலரும் பகிர்ந்து வைரலானது.

இந்த நிலையில் சீனாவில் உள்ள பிரபல தொண்டு நிறுவனம் சிறுவனுக்கு தேவையான உதவிகளைச் செய்து தர முன்வந்துள்ளது. அதுமட்டுமின்றி சிறுவன் பயிலும் பாடசாலையிலும் தேவையான வசதிகளை செய்து தரவும் உறுதி அளித்துள்ளனர். மேலும்குறித்த சிறுவனுக்கு உதவும்பொருட்டு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதுவரை பொதுமக்களிடம் இருந்து சுமார் 245 ஆயிரம் பவுண்ட்ஸ் நிதியும் திரட்டப்பட்டுள்ளது. (இ)

# மர்ம நோயால் 60 பேர் சாவு

கேப்டவுன்ஜன.15


தென்னாபிரிக்காவில் லிஸ்டீரியோசிஸ் அல்லது லிஸ்டீரியா என்று அழைக்கப்படுகிற மர்ம நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி 60 பேர் பலியாகியுள்ளனர்.

மேலும் 750 பேருக்கு இந்த நோய் தாக்கத்துக்குள்ளாயிருக்கின்றனர் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. மண், தண்ணீர், பால்பண்ணைப் பொருட் கள், கடல் உணவு, பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றிலேயே குறித்த பக்டீரியா காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தைகள்தான், பெரும்பாலும் இந்த நோயின் தாக்கத்துக்குள்ளாகின்றனர் என உலக சுகாதார நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் கிறிஸ்டியன் லின்ட்மீயிர் தெரிவித்தார்.

"இந்த நோய் மிகப்பெரிய சவாலாக அமைந்து உள்ளது" என்றும் கிறிஸ்டியன் லின்ட்மீயிர் கூறி உள்ளார். (இ)

# ரசிகனுக்கு மரியாதை



சென்னை,ஜன.15

தளபதி விஜய், தன் ரசிகர்கள் மீது வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்திய சம்பவத்தைப் பார்த்த பலரும் மனம் நெகிழ்ந்து அவரைப் பாராட்டியுள்ளனர்.

ஆனந்த விகடன் வார இதழ், 2017 ஆம் ஆண்டுக்கான சிறந்த நடிகருக்கான விருதை விஜய்க்கு அளித்தது. இந்த விருது வழங்கும் வைபவம் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதன்போது ரசிகர் ஒரு
வர் விஜய்யுடன் புகைப்படம் எடுக்க ஓடிவந்தார். ஆனால் அங்கிருந்த பாதுகாப்புப் பிரிவினர் அவரை தடுத்து நிறுத்தி வெளியேற்ற முற்பட்டனர்.

இதை அவதானித்த நடிகர் விஜய் அனைவரையும் தடுத்து நிறுத்தி அந்த ரசிகருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். இதனையே அங்கிருந்த அனைவரும் பாராட்டியுள்ளனர்.(இ

# ஐ.நா சபையிலும் அதிகாரப் பகிர்வு



நியூயோர்க், ஜன.15

ஐ.நா பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் அதிகாரத்தைக் குறைத்து சகல நாடுகளுக்கும் சம அதிகாரத்தை அளிக்க ஐ.நா ஆலோசித்து வருகின்றது.

ஐ.நா. பாதுகாப்புச்சபையில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய 5 நிரந்தர உறுப்பு நாடுகளும் 10 நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளும் உள்ளன. பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் நிரந்தர உறுப்பு நாடுகள் தங்களது வீட்டோ அதிகாரத்தால் ரத்து செய்ய முடியும்.

இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமை அமெரிக்கா அங்கீகரித்ததற்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அண்மையில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தால் ரத்து செய்தது. இதேபோல முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு தீர்மானங்களை நிரந்தர உறுப்பு நாடுகள் தங்களது சுயலாபத்துக்காக ரத்து செய்துள்ளன.

எனவே ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று இந்தியா உள்ளிட்ட நாடுகள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றன.

இந்தநிலையில்,

" ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அதிகாரச் சமநிலையை ஏற்படுத்த வேண்டியது அவசியம். இது தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகின்றோம்" என்று ஐ.நா பொதுச்செயலர் அன்ரனியோ குட் ரஸ் தெரிவித்துள்ளார்.(அ)

# மாற்றமில்லை

தெஹ்ரன், ஜன.15

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்று அமெரிக்காவின் கோரிக்கையை ஈரான் நிராகரித்துள்ளது.

"அணுசக்தி ஒப்பந்தத்தை மீறிய ஈரான் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்படும். அல்லது 2015 ஆம் ஆண்டு அந்நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும்"- என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரி வித்திருந்தார்.

இதுகுறித்து ஈரான் வெளியிட்ட அறிக்கையில் "டொனால்ட் ட்ரம்ப் கூறுவது போல் 2015 ஆம் ஆண்டு உலக வல்லரசுகளுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்று கொள்ளமாட்டோம். எதிர்காலத்திலும் இதுதான் எங்கள் முடிவு" என்று ஈரான் கூறியுள்ளது.

# மனித உரிமைகளுக்கு மதிப்பளியா ட்ரம்ப்!

வோஷிங்டன், ஜன.15

மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கத் தவறிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் ஆட்சிக்கு கீழ் பணியாற்ற முடியாதெனக் கூறி பனாமா நாட்டுக்கான அமெரிக்கத் தூதர் ஜோன் பீலே தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இந்த நிலையில் வெளியுறவு அமைச்சுக்கு அவர் எழுதிய கடிதத்தில், ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கத் தவறியுள்ளார். இதனால் தான் பதவியை இராஜினாமா செய்வதாக அதில் கூறப்பட்டிருந்தது. இந்நிலையில் எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி வரை மட்டும் அவர் பணியில் நீடிப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவருடைய பணிவிலகலை அமெரிக்க வெளியுறவுத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்கக் கடற்படையில் விமானியாக பணியாற்றிய ஜோன் பீலே கடந்த 1990 ஆண்டு அமெரிக்காவின் வெளியுறவுத் துறையில் இணைந்த அவர் 2015 ஆண்டு முதல் பனாமா நாட்டுக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)



## ரோய்-ரூட் அசத்தல் ஆட்டம் இங்கிலாந்து வெற்றி

மெல்பேர்ண், ஜன. 15

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் ரோய் - ரூட்டின் ஆட்டம் கைகொடுக்க இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 0:4 என்ற கணக்கில் பறிகொடுத்த நிலையில், 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று வருகிறது.

இதன் முதலாவது ஆட்டம், நேற்று மெல்பேர்ணில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, பிஞ்சின் சதம் (107) மிச்செல் மார்ஷ் (50), ஸ்ரொய்னிஸ் (60) ஆகியொரின் அரைச்சதங்களும் கைகொடுக்க 8 விக்கெட்டுகள் இழப்புக்கு, 304 ஓட்டங்களைச் சேர்த்தது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில், பிளாங்கெட் 3 விக்கெட்டுகளையும், ராஷிட் 2 விக்கெட்டுகளையும் பிடுங்க, வோர்கஸ், வூட், அலி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைச் சாய்தனர்.

பின்னர், 305 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணி, ரோயின் அபாரச் சதமும் (180), ரூட்டின் (91-ஆட்டமிழக்காமல்) நிதான ஆட்டமும் கைகொடுக்க, 48.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 308 ஓட்டங்களைச் சேர்த்து, 5 விக்கெட்டுகளால் வெற்றியைத் தனதாக்கியது.

ஆட்டநாயகனாக ரோய் தெரிவுசெய்யப்பட்டார்.

(ஐ)




நியூசிலாந்து, ஜன. 15

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்தில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடந்து வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டியில் இலங்கை- அயர்லாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அதன்படி களமிறங்கிய அயர்லாந்து அணி, 48 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 207 ஓட்டங்களைச் பெற்றது.

பின்னர் 208 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி, அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 37.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 208 ஓட்டங்களைச் சேர்த்து, ஏழு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

லக்ஷன் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும், கமிந்து மெண்டிஸ் 74 ஓட்டங்களையும் சேர்த்தனர், ஆட்ட நாயகனாக லக்ஷன் தெரிவு செய்யப்பட்டார்.

(ஐ)

## இந்தியாவைக் காக்க கோஹ்லி நிதானம்

செஞ்சூரியனில் நடைபெற்று வரும் 2ஆவது டெஸ்டின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இந்தியா 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 183 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, முதல்நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 269 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடங்கியது. தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 335 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்திய அணி சார்பாகப் பந்துவீச்சில் அஷ்வின் 4 விக்கெட்டுகளையும், இஷாந்த் ஷர்மா 3 விக்கெட்டுகளையும், ஷமி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. தொடக்க வீரர்களாக முரளி விஜயும், லோகேஷ் ராகுலும் களமிறங்கினர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 28 ஆக இருக்கும் போது லோகேஷ் ராகுல் (10) ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த புஜாரா எதிர்பாராதவிதமாக 'ரன் அவுட்'டாகி அதிர்ச்சியளித்தார்.

அதன்பின் களமிறங்கிய அணித்தலைவர் கோஹ்லி - முரளி விஜய் ஜோடி பொறுப்பாக ஆடியது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 107 ஆக இருந்தபோது 46 ஓட்டங்களில் முரளி விஜய் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ரோகித் சர்மா (10), பர்த்தீவ் படேல் (19) ஆகியார் வெளியேறினர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் நிதானமாக விளையாடிய கோஹ்லி, அரைச் சதமடித்தார். இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 183 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. கோஹ்லி 85 ஓட்டங்களுடனும், பாண்டியா 11 ஓட்டங்களுடனும் களத்தில் நின்றனர்.

நேற்றைய நிலைவரப்படி இந்திய அணி தென்னாபிரிக்காவை விட 152 ஓட்டங்கள் பின்தங்கியிருந்தது.

தென்னாபிரிக்க அணி சார்பில் கேஷவ் மகராஜ், மோர்கல், ரபடா, கிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும்.

(ஐ)





## கவலைக்கிடம்

WWE ஜாம்பவான் டைப்பூனின் உடல் நிலை மோசமாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

WWE மல்யுத்தப் போட்டிகளில் ஜாம்பவானாகத் திகழ்பவர் டைப்பூன் என்கிற பிரட் ஓட்மேன் (61). இவர் 1980 மற்றும் 1990 கால கட்டத்தில் முன்னணி வீரராகத் திகழ்ந்து, பல்வேறு சம்பியன்ஷிப் பட்டங்களை வென்றுள்ளார். 2001இல் WWE போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற டைப்பூனுக்குப் பெரியளவில் ரசிகர்கள் பட்டாளம் உள்ளது.

இந்நிலையில், சில காலமாக நீரிழிவு நோயினால் டைப்பூன் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது அவரின் உடல் நிலை மோசமடைந்துள்ளது.

இதையடுத்து டைப்பூன் ரசிகர்களும், சக மல்யுத்த வீரர்களும் அவருக்காகப் பிரார்த்தனை செய்து வருகிறார்கள். சக மல்யுத்த வீராங்கனையான லிசா தனது டுவிட்டர் பதிவில், "உங்கள் பிரார்த்தனையில் டைப்பூன் பெயரையும் வைத்திடுங்கள், நீங்கள் விரைவில் குணமாக வேண்டும்" எனப் பதிவிட்டுள்ளார். இன்னொரு வீரான லானி போ்போ தனது பதிவில், "பிரட்டுக்கு பிரார்த்தனைகள் தேவை" என பதிவிட்டுள்ளார்.

(ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 15.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.